අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 · +94112785818
info@moe.gov.lk · www.moe.gov.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My Ref. | ED/05/68/02/84 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your Ref. | | දිනය<br>திகதி<br>Date | 2020.07.27 |

சுற்றிக்கை இலக்கம் 19/2020

கல்வி அமைச்சின் சகல மேலதிக செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
பரீட்சை ஆணையாளர நாயகம் இலங்கை கல்வித் திணைக்களம்
தலைவர், அரச அச்சகக் கூட்டுத்தாபனம்
தலைவர் நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைச் சபை
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

## கடமைக் கடித பரிமாறல்கள் தொடர்பாக தாபனக் விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள்

கல்வி அமைச்சின் கீழ் சேவைபுரியும் அலுவலர்களினால் கடந்த காலத்தில மேற்கொள்ளப்பட்ட கடித பரிமாறல்களின்போது பின்பற்றப்பட்ட முறையற்ற செயற்பாடுகள் மற்றும் தாபன விதிக்கோவையின் விதிமுறைகளில் இருந்து விலகிய காரணத்தினால் அவ்விடயங்கள் குறித்து பின்வரும் ஒழுங்குவிதிகள் மற்றும் ஆலோசனைகளுக்கமைவாக எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றேன்.

02 சகல அரச அலுவலரும் கடமைக் கடித பரிமாற்றங்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXVII ஆம் அத்தியாயத்தில் மற்றும் XXVIII ஆம் அத்தியாயத்தின் ஒழுங்குவிதிகளை பின்பற்ற வேண்டும்

03 தமது தனிப்பட்ட உரிமை தொடர்பாக நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் எந்தவொரு விடயம் தொடர்பாகவும் கோரிக்கை அல்லது மேன்முறையீடொன்று முன்வைப்பதற்கு எந்தவொரு அலுவலருக்கும் இயலும் என்பதுடன் அது தொடர்பில் தாபன விதிக்கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 5 மற்றும் 6 ஆம் வாசகங்களின் ஒழுங்குவிதிகளை உரித்தாக்கிக் கொள்வது அவசியமாகும்.

04 அதன் பிரகாரம், அத்தகையான கோரிக்கை அல்லது மேன்முறையீடு ஒன்றை கௌரவ அமைச்சர் அல்லது உயர் அதிகாரி ஒருவருக்கு முன்னிலைப்படுத்தும்போது எப்போதும் படிநிலைக்கு ஏற்புடைய விதத்தில் தமது அண்மித்த மேற்பார்வையாளர் மற்றும் உரிய அதிகாரிகள் மூலமாக முன்னிலைப்படுத்த வேண்டியதுடன்,

05 அத்துடன், ஒழுக்காற்று தொடர்பான மேன்முறையீடு என்றால் தாபன வித்க்கோவை XLVIII ஆம் அத்தியாயத்தின் ஒழுங்குவிதிகளுக்கு இணைவாக இருத்தல் வேண்டும்

06 மேற்படி ஒழுங்குவிதிகளுக்கு அப்பால் ஏதேனும் பிரதிநிதித்துவம் முன்வைக்கப்பட்டிருப்பின் அது குறித்து தாபன விதிக்கோவையின் XXVIII அத்தியாயத்தின் 6:2 வாசகத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும்

07 இதற்கு மேலாக, அரசாங்கத்தின் கொள்கை அல்லது நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக கருத்துக்களை வெளியிடுதல் மற்றும் விமர்சித்தல் தாபன விதிக்கோவையின் XXXI அத்தியாயத்தின் 3 ஆவது வாசகத்திற்கமைவாக இருத்தல் வேண்டும்

08 எனவே, மேற்குறிப்பிட்ட விதிமுறைகளை முழுமையாக பின்பற்றுவதற்கும் அது தொடர்பாக உங்கள் அலுவலகத்தில், பிரிவில் அல்லது கிளையில் சகல அலுவலர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

என். எச். எம். சித்ரானந்த
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதி:- செயலாளர, அரச நிர்வாக, உள்நாட்லுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – த.அ.கொ.